**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI**
**OS No. 27/2024**

**2025**ம் வருடம் ஜுன் திங்கள் 13ம் நாள் வாதி தரப்பில் 1வது சாட்சியத்தின் வாக்குமூலம் 1873ம் ஆண்டு 10வது விதியின் படி திரு. V.மனோஜ்குமார், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் : திரு. சரவணன் (PW1) கிராமம்:
தந்தை / கணவர் பெயர் : சண்முகம் தொழில் :
வயது :

முதல்விசாரணை:–

1. நான் இவ்வழக்கின் வாதியாவேன். என் தரப்பு வாய்மொழி சாட்சியத்தை எழுத்துமூலமான பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இந்த பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் என்னுடைய அறிவுக்கு முழுமையாய் தெரிந்த மட்டிலும் உண்மை என்று உறுதி கூறி இந்த பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள விபரங்களை எனது முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

2. 23.11.1955ம் தேதியிட்ட வாதிகளின் மூதாதையரான கெங்கன் மகன் வெள்ளைக்கு சுப்பையாத்தேவர் மகன் காளிமுத்துத் தேவர் எழுதிக் கொடுத்த கிரைய ஒத்தி பத்திரம் எண்.4300/1955ன் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. வாதிகளின் மூதாதையர் வெள்ளை அவர்களின் பெயரில் ஏற்பட்ட பட்டா தமிழ்நாடு அரசு இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட கணினி நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 05.12.2023ம் தேதியிட்ட வாதிகளின் மூதாதையர் பெயரில் உள்ள தமிழ்நாடு வருவாய்துறை இணையதளத்திலிருந்து இ.எண்.10(1) கீழான பதிவிறக்கம் செய்யப்பட்ட கணினி நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 15.05.2024ம் தேதி வாதிகளின் மூதாதையர்களான காளி மற்றும் மூக்கன் அவர்களின் பெயரில் ஏற்பட்ட அடங்கலின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 05.04.2024ம் தேதியிட்ட பிரதிவாதிகளுக்கு எதிராக கோவிலாங்குளம் காவல்

நிலையத்தில் வாதி அளித்த புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்ட குற்ற எண்.21/2024 கீழான முதல் தகவல் அறிக்கை இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட கணினி நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 18.01.2024 ம் தேதி வாதி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சியரிடம் விபரம் கேட்டு அதற்கு ஆட்சியர் அவர்கள் அனுப்பி வைத்த பதில் கடிதம் எண்.1344/2023 ன் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. 13.06.2024 ம் தேதியிட்ட நீதிப்பேராணை மனு எண்.12/355 ல் இடையீட்டு பரிகார மனு W.P.(MD).No.10926/2024 ல் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை பிறப்பித்த உத்தரவு இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட கணினி நகல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. வாதிகளின் மூதாதையர் பெயரில் ஏற்பட்ட "அ"பதிவேட்டின் கணினி நகல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. 16.05.2024 ம் தேதியிட்ட தாவா சொத்தினை காண்பிக்கக்கூடியா FMB நில அளவீட்டு வரைபடத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11. 1940 முதல் 1950, 1951 முதல் 1961, 1961 முதல் 1974, 1975 முதல் 1986, 1987 முதல் 2024 வரையிலான வில்லங்கச் சான்றிதழ்களின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

12. 1வது வாதியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

13. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(ஒம்./–திருமதி. G. தங்க கார்த்திகா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.